1993 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 319, திரு. ஆ. சுப்புரத்தினம். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

319—

பழனி வட்டத்திற்கு ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்துதல்.

* 11699— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், பழனி வட்டத்திற்கு ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்தப் படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. ஆ. சுப்புரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே பழனி வட்டத்திற்கான ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகம் தற்சமயம் அண்ணா மாவட்டத்தினுடைய தலைநகரான திண்டுக்கல்லில் இயங்கி வருகிறது. இன்றைக்கு திண்டுக்கல் நகரத்திற்கு அடுத்தபடியாக பழனி நகரம் மிகப் பெரிய நகரமாக இருக்கக்கூடிய காரணத்தினால், இந்த ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அலுவலகத்தை பழனிக்கு மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டத்திற்கும் வேடசந்தூர் வட்டத்திற்கும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் அலகு 2 என்ற அலுவலகம் இயங்கி வருகிறது. இது அரசு முடிவின்படி இரண்டு தாலுக்கா நகரங்களுக்கு ஒரு தனி வட்டாட்சியர் என்ற முடிவின்படி செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இது இந்த தலைமை இடத்தில் இயங்க வேண்டும் என்பதுதான் நிர்வாகத்தினுடைய ஆலோசனை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்புகொண்டபோது அந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆகையால் அது அங்கேதான் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 12

திரு. ஆ. சுப்புரத்தினம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை ஆதிதிராவிட மக்கள் இந்த தனி வட்டாட்சியரிடம் அரசு திட்டங்களைப் பெறுவதற்காக பழனியிலிருந்து திண்டுக்கல் செல்ல 70 கிலோ மீட்டர் தூரம் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. பாமர மக்களுக்கு அறியாமை என்ற பிரச்சினையோடு பணப் பிரச்சினையும் இருக்கக்கூடிய காரணத்தால், இன்றைக்கு ஆதிதிராவிடர் பெருமக்களுடைய நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டியும், ஆதிதிராவிடர்களுக்காக தனி தொழிற்பேட்டை அமைத்தும், ஆதிதிராவிடர்கள் நெஞ்சுயர்ந்து, தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய வகையிலே செய்து, நாளைய மறுதினம் பாபா சாகிப் அம்பேத்கார் மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டக்கூடிய நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இந்த தனி வட்டாட்சியர் அலுவலகத்தை பழனியின்—அதுவும் குறிப்பாக பழனி ஒரு தனித் தொகுதியாக இருக்கக்கூடிய காரணத்தால்—திண்டுக்கல்லிலிருந்து பழனிக்கு இடம் மாற்றம் செய்யப்படுமா என ஆவலோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினரும் இங்கே தான் இருக்கிறார். ஆகையால் அதை மாற்றுவதால் சில பிரச்சினைகள் ஏற்படும். ஆகையால் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு தனி ஆய்வாளர் இருக்கிறார். வருவாய்த்துறை ஆய்வாளர் மூலமாக அந்த கோரிக்கைகள், குறைகள் போன்றவற்றை அந்தப் பகுதியிலே சுற்றுப்பயணம் செய்து சேகரித்து தனி வட்டாட்சியருக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகையால் இந்த அலுவலகம் மாற்றப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 320, திரு. ஆர். தங்கராஜ். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

320—

வாரியங்காவலில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்தல்.

*10599— திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் உள்ள வாரியங்காவல் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு பிற்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு மாணவர் விடுதி எப்போது அமைக்கப்படும்?

TRUTH ALONE TRIUMPHS